# SOCIO ECONOMIC ENVIRONMENTAL PROBLEMS OF COASTAL FISHERIES SOCIETY: A CASE STUDY BASED ON SAINTHAMARUTHU FISHERIES SOCIETY

(1) Rafeeka Ameerdeen (2) M.B. Nafrin

South Eastern University of Srilanka

(2)nafrinmb@gmail.com

## ABSTRACT

The Research on "Socio Economic Environmental Problems of Coastal Fisheries Society: A case study based on Sainthamaruthu Fisheries Society". The prime objective of this study is to identify the Socio Economic Environmental Problems of Coastal Fisheries Society. In this study, various methods were used for data collection- from primary as well as secondary sources. Secondary data was collected from Divisional Secretariat, Fisheries Office Records, previously conducted studies, books, publications, journal articles, reports, census data, internet and other relevant documents. Primary data is collected through questionnaires survey and primary data were also collected from structured interviews with key informants. Through this is study it is found that the fishing society is facing many challenges and problems. There are many Environmental, socio and economic problems were identify the Sainthamaruthu fisheries community. Eventually, This Research Concision And Suggestions Have Been Mentioned and The primary and secondary data were gathered and analyzed and the objectives of the research were achieved ,therefore research has been completed successfully.

**Key Words : Coastal, Fisheries, Fisheries Society, problems**

## ஆய்வு அறிமுகம்

உலகின் பிரதானமான பல தொழில்களில் வருமானத்தை ஈட்டித்தரும் ஒரு தொழிலாக மீன் பிடித்தல் காணப்படுகின்றது.உலகில் வாழும் மக்களில் 60-70 சதவீதமானோரின் வாழ்வாதாரம் கரையோரத்திலும் கரையோர மூலவளங்களிலும் நேரடியாகவும் மறைமுகமாகவும் தங்கியுள்ளது. அதிலும் குறிப்பாக இலங்கை போன்ற இலங்கை போன்ற அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளில் வாழும் மிகக் கூடுதலான மக்கள் இம்மீன்பிடியில் தங்கியள்ளனர்.


இலங்கையின் பொருளாதாரத்தை தீர்மானிப்பதில் மீன்பிடி மிக முக்கியமானதொரு இடத்தை பிடிக்கின்றது.கரையோர வளங்களில் மீன்வளமானது புதுப்பிக்கக்கூடிய வளமாகும்.இவ்வளமானது சமூக பொருளாதார ரீதியில் பாரிய பங்களிப்பினை செய்கின்றது.

இலங்கையின் தென்கிழக்கில் அமைந்துள்ள சாய்ந்தமருது பிரதேசத்தின் பொருளாதார நடவடிக்கைகளாக மீன்பிடி விவசாயம் வர்த்தகம் போன்றவற்றை குறிப்பிடலாம்.இப்பிரதேசத்தில் வாழ்கின்ற மீனவர்களின் சமூக நிலையானது பாதிக்கப்பட்டிருப்பதற்கான காரணம் என்னவெனில் அவர்கள் பொருளாதார ரீதியில் பின்னடைவில் இருப்பதனால் ஆகும். ஏனைய சமூகத்தோடு ஒப்பிடுகையில் இவர்களின் சமூக பொருளாதார நிலை குறைவாகவே காணப்படுகின்றது.இவ்ஆய்வு பிரதேசத்தில் வாழும் கரையோர மீன்பிடி மக்கள் மீன் வளத்தை கொண்டு தங்களது பொருளாதாரத்தை அதிகரிக்க முடியாமல் உள்ளது.

இச்சமூகத்தில் காணப்படும் மீன்பிடியில் மாற்றங்கள் ஏற்படாமையும் அதேநேரம் அவர்கள் மத்தியில் கல்வியறிவு குறைவாக காணப்படுகின்றமை இப்பிரதேச இளைஞர்கள் இத்தொழிலில் ஆர்வமில்லாமை பருவகால வேலையின்மை முறையற்ற மீன்பிடி நவீன தொழிநுட்ப வசதிகளின்மை படகு இறங்கு துறை அமைக்கப்படாமை போதிய உட்கட்டமைப்பு வசதிகள் இன்மை மற்றும் சூழல்சார் பிரச்சினைகள் போன்றன அதற்கு காரணங்களாக காணப்படுகின்றது.

இயற்கை வளங்களில் ஒன்றான தென்கிழக்கு கரை வளம் மீன்கள் நிறைந்த ஒரு பகுதியாகும்.எனவே இப்பகுதி மீன்பிடி மக்களின் விருத்திக்கான வழி வகைகளையும் ஆராயும் நோக்கத்திலும் மனித உரிமை அடிப்படையிலும் நடுநிலையான மனோநிலையிலும் சாய்ந்தமருது கரையோர மீனவ சமூகத்தின் சமூக பொருளாதார விருத்தியை கருத்திற் கொண்டு எதிர்கால சந்ததிகளின் தேவை கருதி இவ்ஆய்வானது முக்கியத்துவம் பெறுகின்றது.

**ஆய்வுப்பிரதேசம்**




(Source Sainthamaruthu ds Office)

சாய்ந்தமருது பிரதேசமானது இலங்கையின் அம்பாறை மாவட்டத்திலுள்ள 20 பிரதேச செயலாளர் பிரிவுகளில் ஒன்றாக கிழக்குக் கரையில் அம்பாறை நகருக்கு கிழக்கே அமைந்து காணப்படுகின்றது.இப்பிரதேசம் ஒரு கரையோரப் பிரதேசமாக காணப்படுவதுடன் களப்பு ஆறு என்பவற்றை கொண்டதாகவும் காணப்படுகின்றது.

ஆய்வுப் பிரதேச புவியியல் பிண்னணி : வட அகலாங்கு $7^{0}23'15''$-$7^{0}24'5''$ கிழக்கு நெட்டாங்கு $81^{0}50'3''$-$81^{0}51'7''$

பிரதேச எல்லைகள்

வடக்கு : கல்முனை பிரதேச செயலாளர் பிரிவு

கிழக்கு : வங்காள விரிகுடாக் கடல்

தெற்கு : காரைதீவு பிரதேச செயலாளர் பிரிவு

மேற்கு : சம்மாந்துறை பிரதேச செயலாளர் பிரிவு

**ஆய்வுப் பிரச்சினை**

- மீனவ குடும்ப அங்கத்தவர்கள் தொகை அதிகரிப்பு
- மீன்பிடியை அதிகப்படுத்த மூலதன பற்றாக்குறை காணப்படல்
- மீன்பிடித்தல் முறைகளில் மாற்றங்கள் ஏற்படாமை
- வாழ்வாதாரம் குறைவதனால் மக்கள் கஷ்டப்படல்

**ஆய்வு வினாக்கள்**

- மீன்பிடி முறைகளில் மாற்றங்களை கொண்டு வர முடியுமா?
- ஆய்வுப் பிரதேச மீனவ சமூகத்திடையே பொருளாதார மற்றும் சமூக ரீதியில் அபிவிருத்தியினை கொண்டு வர முடியுமா?

**ஆய்வு நோக்கங்கள்**

- ஆய்வுப் பிரதேச கரையோர பிரதேச மீனவ மக்களின் சமூக பொருளாதார மற்றும் சூழலியல் பிரச்சினைகளை கண்டறிதல்
- பிரதேச மீனவ மக்களின் வாழ்வாதாரத்தை பேணி நிலையான அபிவிருத்தியை மேற்கொள்ளல்

**ஆய்வு முறையியல்**

**முதனிலைத் தரவுகள்**

இவ் ஆய்வானது தெரிவு செய்யப்பட்ட 100 மீனவ குடும்பங்களுக்கு வினாக் கொத்துக்கள் வழங்கப்பட்டு சமூக பொருளாதார பிரச்சினைகள் இனம்காணப்பட்டன.


நேரடி அவதானம் புகைப்படங்கள் போன்ற வெளிக்கள ஆய்வுகளின் மூலம் தரவுகள் சேகரிக்கப்பட்டுள்ளன.

**இரண்டாம் நிலைத்தரவுகள்**

இரண்டாம் நிலை தரவுகளின் படி மீன்பிடிக் கூட்டுறவு சங்க தரவுகள்,புள்ளிவிபரங்கள்,சஞ்சிகைகள்,பத்திரிகைகள்,இணையத்தளம் போன்றவற்றிலிருந்து தரவுகள் பெறப்பட்டன.

**பெறுபேறுகளும் கலந்துரையாடலும்**

சாய்ந்தமருது பிரதேச வருடாந்த சராசரி மீன்பிடி வீதம்




| பிரதேச செயலகம் | மீன்பிடி கிராமங்கள் | கி.உ. பிரதேசங்கள் | மீன்பிடிப்பகுதி முகாம் | மீன்பிடி சங்கங்கள் |
|---|---|---|---|---|
| சாய்ந்தமருது | 02 | 17 | 06 | 16 |

மூலம் : மீன்பிடி திணைக்களம் (கல்முனை)

மூலம் : மீன்பிடி திணைக்களம் (கல்முனை)

சாய்ந்தமருது கரையோர பிரதேச மீனவர்கள் மீன்பிடி காலத்திலும் மீன்பிடி அல்லாத காலத்திலும் பல்வேறு பிரச்சினைகளை எதிர் கொள்கின்றனர்.

**சூழலியல் பிரச்சினைகள்**

1.கரையோர மாசடைவும் மண்ணகழ்வும்

சாய்ந்தமருது கரையோர பிரதேசத்தில் கரையோர மாசடைவு மற்றும் மண்ணகழ்வு போன்றன இடம்பெறுகின்றன. இதற்கு அப்பிரதேசத்தை சூழ்ந்து வாழும் மக்களே காரணமாகின்றனர்

- கரையோரம் மாசடையும் வழிகள்
- கரையருகில் மீன்கள் வெட்டப்படல்
- வெட்டிய மீன்களின் கழிவுகள் கடலில் சேருதல்
- வாடிகளின் கழிவுகள் கடல் நீரில் கலத்தல்
- கடலோரத்தில் மலம் கழித்தல்
- கடல் முட்டைகள் சல்லுகள் சுத்தப்ப:டுத்தப்படாமல் விடல்.







**(மூலம் களஆய்வு, 2019)**

கரைவலை மீனவர்கள் அதிகாலையிலேயே கடற்கரைக்கு வந்து விடுவதனால் அவர்கள் மலம் கழிக்கும் செயற்பாட்டை அவ்விடத்திலேயே நிறைவேற்றுகின்றனர். மேலும் கழிவுப் பொருட்களையும் கரையோரத்தில் கொட்டுவதனால் கரையோரம் மாசடைகின்றது.

2. இயற்கை அனர்த்தங்கள்

சூழல் சமநிலை குழம்புவதால் இயற்கை அனர்த்தங்கள் ஏற்படுகின்றன. சாய்ந்தமருது பிரதேசத்தில் சுனாமி,சூறாவளி,வெள்ளம்,இடி மின்னல் போன்ற அனர்த்தங்கள் ஏற்படுவதுண்டு. 2004ம் ஆண்டு ஏற்பட்ட சுனாமி 1977ம் ஆண்டு ஏற்பட்ட சூறாவளி 2010ம் ஆண்டு ஏற்பட்ட வெள்ளம், இடையிடையே ஏற்படும் இடிமின்னல் போன்றவற்றினால் மீனவர்கள் பாதிக்கப்படுகின்றனர். படகுகள்,தோணிகள்,வலைகள்,ஏனைய மீன்பிடி உபகரணங்கள்,மீன் வாடிகள்,மீனவர் ஓய்வறைகள்,ஐஸ் உற்பத்தி நிலையங்கள், குடியிருப்பு பிரதேசங்கள் போன்றன அனர்த்தங்களினால் மிகவும் பாதிக்கப்படுகின்றன.

3. முருகைக் கற்களின் அழிவு

டைனமைட் பாவித்து மீன் பிடித்தல்,லைட்கோஸ் வலை (ஒளியை பாய்ச்சி) மீன் பிடித்தல்,சுருக்கு வலை,பொக்கணை வலை, சிறிய கண்கள் கொண்ட வலைகள் போன்றவற்றை பயன்படுத்தி மீன் பிடிப்பதனால் முருகைக் கற்களில் வலைகள் பட்டு சிதைவு உடைவு போன்றவற்றுக்குள்ளாகின்றன.

4.வெள்ளப்பெருக்கு ஏற்படல்

5. சூழல் மாசடைதல்

6. நீர் பற்றாக்குறை

7. இட நெருக்கடி

**சமூகவியல் பிரச்சினைகள்**

1. தொழில் தேர்சிசியின்மை

சாய்ந்தமருது கரையோர பிரதேச மீனவர்களுக்கு மீன்பிடி பற்றிய தகுந்த பயிற்சி நெறிகள் போதாமையாகவுள்ளன.அனுபவத்தை வைத்து பழைய முறைகள் மூலம் சில மீனவர்கள் செயற்படுவதோடு இளம் மீனவர்களுக்கு அது பற்றிய அனுபவம் ஏதும் இல்லாத நிலையில் மனீபிடிக்கச் செல்கின்றனர்.கடற்தொழிலில் சிலருக்கு அனுபவமுள்ள போதிலும் அவர்களுக்கு மீன்பிடி தொழிநுட்ப தேர்ச்சி இல்லாது காணப்படுவதுடன் சிலருக்கு குறைவாகவும் உள்ளது.

2. வருமானம் போதாமை

மீன்பிடி நுட்ப முறைகளில் புதிய நுட்ப முறைகளை கையாழ்வதில் இப்பிரதேசம் பின்தங்கிய நிலையிலுள்ளது. பாரம்பரிய மீன்பிடி முறையானது இப்பிரதேச மீன் உற்பத்தியை வளர்ச்சியடையச் செய்வதில் பெரும் தடைக்கல்லாகவுள்ளது. குறைந்தளவு மீன்பிடியால் வருமானம் போதாது உள்ளதுடன் மீனவர்களின் முழுமையான தேவைகளை நிறைவேற்றுவதில் கடினத்தன்மையும் ஏற்படுகின்றது.

தொழில் தேர்சிசியின்மைக்கும் வருமானம் போதாமைக்குமான காரணங்கள்

- பிடிக்கப்படும் மீன்களுக்கு விலை குறைவாக காணப்படல்.
- மீன்பிடி தொழில் தேர்ச்சிக்காக பயிற்சி வகுப்புக்கள் நடத்தப்படாமை.
- முட்டுப்படுத்தப்பட்ட மீன்பிடி உபகரணங்களுக்கு மட்டும் தேர்ச்சியுள்ளமை ( பூவலை முப்புரி வலை கரைவலை

3. சட்டவிரோத மீன்பிடி நடவடிக்கைகள் காணப்படுகின்றன.

இப்பிரதேசத்தில் சட்டவிரோதமான மீன்பிடி நடவடிக்கைகள் காணப்படுகின்றது.டைனமைட் பாவித்து மீன் பிடித்தல் சுருக்கு வலை பொக்கணை வலை சூழும் வலை போன்றவற்றின் மூலம் சட்டவிரோதமான முறையில் மீன்பிடிக்கப்படுகின்றது.

4. பாரம்பரிய முயையை பின்பற்றலும் நவீன தொழிநுட்பக் குறைபாடும்.
   சாய்ந்தமருது பிரதேசத்தை பொறுத்தவரையில் மீன்பிடி முறையில் 80மூஆனோர் மரபு ரீதியான முறையினையும் 20மூ ஆனோர் நவீன முறையினையும் கையாளுகின்றனர். நவீன தொழிநுட்பங்களை கையாளும் குறைபாடு பல பிரச்சினைகளை ஏற்படுத்துகின்றது.அண்மையில் 2019.09.18 ம் திகதி மீனவர்கள் காணாமல் போன சம்பவமானது சரியான தொலைத்தொடர்பில்லாததால் ஏற்பட்டமை குறிப்பிடத்தக்கதாகும்.

5. உயிர் காக்கும் சுகாதார வசதிகளின்மை
6. உளவியல் ரீதியான பாதிப்புக்கள்

**பொருளாதாரப் பிரச்சினைகள்**

1. மூலதனப் பிரச்சினைகள்

கரையோர மீனவர்கள் பொதுவாக வறியவர்களாக காணப்படுகின்றனர்.இவர்கள் பாரிய முதலீடுகளை செய்து இத்தொழில் முயற்சியில் ஈடுபடுவதனால் பல்வேறு மூலதனப் பிரச்சினைகளுக்கு முகம் கொடுக்கின்றனர்.

மீனவர்கள் எதிர்நோக்கும் மூலதனப் பிரச்சினைகள்

1. படகு காணாமல் போதல்
2. வலை களவாடப்படல்
3. வலையை கப்பல் துண்டாடல்
4. படகை கரைக்கு இழுக்கும் போது படகு சேதப்படுதல்
5. படகின் இன்ஜீன் திருத்தத்திற்கு கூடுதலாக பணம் செலவளிதல்.
2. பாதிக்கப்பட்ட மீனவர்களுக்கு போதியளவு நிவாரணம் வழங்கப்படாமை.
3. எரிபொருள் பிரச்சினைகள்

2. மீன்பிடி உற்பத்தி வீழ்ச்சியடைந்தமை
3.வேலை வாய்ப்பினை இழந்தமை.

**முடிவுரையும் விதந்துரையும்**

- இப்பிரதேச மீனவர்களின் மீன்பிடியில் முறையான மாற்றத்தை கொண்டு வருதல் வேண்டும்.பாரம்பரிய மீன்பிடி முறைகள் கைவிடப்பட்டு நவீன மீன்பிடி முறைகள் அறிமுகம் செய்யப்படல் வேண்டும். அதற்காக அரச,அரச சார்பற்ற நிறுவனங்கள் முன்வந்து பல்வேறு உதவித் திட்டங்கள் மூலம் அவர்களை முன்னேற்ற வேண்டும்.
- ஆய்வுப் பிரதேசத்தில் கரையோர வளத்தை பாதுகாக்க வேண்டும்.அதிகளவு மண்ணகழ்வு நடவடிக்கைகள் இடம்பெறுவதால் கரையோர அரிப்பு அதிகமாக இடம்பெற்று தென்னை மரங்கள் அழிகின்றன. கரையோர பாதுகாப்பு சட்டங்களை சரியான முறையில் அமுல்படுத்தி தென்னை மரங்களை நடுதல் வேண்டும்.
- இப்பிரதேச மக்களின் முறையற்ற திண்ம,திரவ கழிவகற்றலினால் கடற்கரைச்சூழல் மாசடைகின்றது. இதற்கு முறையான கழிவகற்றலினால் கடற்கரைச்சூழல் மாசடைகின்றது. இதற்கு முறையான கழிவகற்றல் திட்டத்தை அமுல்படுத்தி மீறுவோருக்கு சட்ட நடவடிக்கை எடுத்தல்.
- வுறியவர்களாக காணப்படும் இப்பிரதேச மீனவர்களின் மூலதனங்கள் பாதுகாக்கப்பட வேண்டும்.படகு காணாமல் போதல்,வலை களவாடப்படல் வெட்டுப்படல் போன்றவற்றிற்கு தீர்வு காணப்படல் வேண்டும்
- மீன்களை பழுதுபடாமல் பாதுகாப்பதற்கான குளிருட்டும் நிலையங்கள் அமைக்கப்படல் வேண்டும்.
- கரையோர மீனவர்களின் நலன்கருதி நன்னீர் மீன்பிடியை ஊக்குவித்தல் வேண்டும்.இதன் மூலம் மீனவர்கள் முன்னேற்றமடைய வாய்ப்புக்கள் அதிகமாகும்.
- தொழிநுட்பங்கள் தொடர்பான புதிய போக்குகளை கடைப்பிடித்தல்
- மீனவர்களுக்கான மீன்பிடி பயிற்சித்திட்டங்களை கொண்டுவருதல்
- மீன்பிடி முகாமைத்துவ செயன்முறைகளை கையாளல்.
- மீனவர்களுக்கான ஓய்வுதியத்திட்டம் கடன் காப்புறுதித்திட்டம் நஸ்டஈடு வழங்கும் திட்டம் போன்றவற்றை சரியான முறையில் நடைமுறைப்படுத்தல்.

உசாத்துணைகள்


1. Alexander .p,(1995).”srilankan fisherman rural capitalism & peasant society’’,Charles subasinge and sons,srilanka.
2. Fisheries statistics, (2019) ,statistics units, planning and monitoring division, ministry of fisheries and aquatic resources development.
3. அத்தப்பத்து.ஆர்.ஏஇஅலங்கைணின் மீன்பிடித்தொழில் களங்களும் மீன்பிடிக்கருவிகளும்’’ மீன்பிடித் ொதழில் மற்றும் நீர்வாழ் வளமூலவளங்கள் திணைக்களம்.
4. Sainthamaruthu resource file report, 2019
5. Fisheries community society,kalmunai.